செ.வெ.எண் - 53 நாள்: 22.11.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் மாரத்தான் ஓட்டம், ஓவியம், பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் மாவட்ட நிர்வாகத்தால் நடத்தப்பட உள்ளது. மாரத்தான் ஓட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள https://ariyalur.nic.in இணையதள முகவரியில் பதிவு செய்து கொள்ளவேண்டும். அதற்கான ஒப்புகை ரசீதுடன் மாரத்தான் ஓட்டத்திற்கு ஆஜராக வேண்டும். ஓவிய போட்டி, பேச்சு போட்டி மற்றும் கட்டுரை போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கில் 04.12.2021 அன்று காலை 09.00 மணியளவில் நடைபெற உள்ளது. மேற்படி போட்டியில் 10 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளலாம். Online பதிவு 22.11.2021 முதல் 30.11.2021க்குள் பதியலாம். இருப்பிட முகவரி, ஆதாரமாக கல்லூரி மாணவர்கள் கல்லூரி அடையாள அட்டை, பொதுமக்கள் ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்பிக்கலாம். மாரத்தான் ஓட்டம் 04.12.2021 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உள்ள திடலில் தொடங்கி பேருந்து நிலையம் மற்றும் செந்துறை சாலை வழியாக மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் முடிவு பெறும். நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் அதற்கான சான்றிதழ்களையும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**